[1979 பிப்ரவரி 14

சின்கோனா தொழிலாளர்களுக்கு போனஸ்.

*வினா எண் 45—திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனா துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போனஸ் சட்டப்படி குறைந்த பட்ச போனஸ் கொடுக்கப்படுகிறதா?

(ஆ) இல்லையெனில், அதன் காரணமென்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) அரசு சின்கோனா தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுவதில்லை.

(ஆ) 1965 ஆம் ஆண்டின் போனஸ் சட்டப்படி அரசின் நிர்வாகத்தின் கீழ் வரும் சின்கோனாத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்க வேண்டியது இல்லை.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அரசு சின்கோனாத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டியதில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதேமாதிரியாக மிகக் குறைந்த கூலி வாங்கிக் கொண்டிருக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ் கிடைக்கும்போது அதைவிடக் குறைந்தபட்சக் கூலி கிடைக்கிற அவர்களுக்கு 'எக்ஸ்கிரேஷியா போனஸ்' அரசு கொடுக்கலாமா, இல்லையா? சட்டம் இல்லாவிட்டாலும் அரசு பார்த்து கொடுக்கலாமா இல்லையா? வேறு சில மாநிலங்களில் போலீஸ்காரர்களுக்குக்கூட எக்ஸ்கிரேஷியா போனஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல நம்முடைய மாநிலத்தில் அரசு சின்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்காவது கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, கடந்த சில மாதங்களுக்கு முன்பு $5\frac{1}{4}$ ரூபாய் என்று இருந்த கூலியை இந்த அரசு $6\frac{1}{2}$ ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. சட்டப்பிரகாரம் போனஸ் கொடுக்க முடியாது என்ற நிலையில் வேறு வகைகளிலே, அதாவது வீட்டு வசதி, போக்குவரத்து வசதி, வைத்திய வசதி, மருந்து வசதி, பள்ளி வசதி போன்ற அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அந்தந்த நிர்வாகத் துறைத் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. எனவே தொழிலாளர்களுக்கு போனஸ் என்று கிடைக்காவிட்டாலும் அதை ஈடு செய்கின்ற வகையில் வேறு பல வகைகளிலே அரசு சலுகைகளை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

1979 பிப்ரவரி 14]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன அத்தனை சலுகைகளும் மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் இந்திய நாட்டில் கொடுக்கப்படுகிறது. அதற்குமேல் போனஸ் கொடுக்கப்படுகிறது என்பது அவர்களுடைய வாழ்க்கைச் செலவுக்கு போதாத, அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில், கொடுக்கிற சம்பளம் போதாததால் அவர்களை கடன் தொல்லைகளிலிருந்து காப்பாற்ற கொடுக்கப்படுகிற ஒன்று. அந்த வகையில் போனஸ் என்று கொடுக்க முடியாவிட்டாலும் எக்ஸ்கிரேஷியா போனஸ் கொடுக்கப்படுவதுதான் நியாயம். அதற்கு எந்த சட்டமும் தேவையில்லை. அரசு முடிவு செய்தால் போதும். வேறு பல மாநிலங்களில் அப்படி செய்திருக்கிறார்கள். வங்காள அரசு போலீஸ்காரர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் போனஸ் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல இங்கும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வேறு மாநிலங்களில் என்னென்ன நடைபெறுகிறது என்பதை நாம் பார்க்கும்போது, அங்கே எந்த அளவுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. அங்கே வாழ்க்கை செலவு என்ன, பிற வசதிகள் என்னென்ன வழங்கப்படுகின்றன என்பதை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் அந்த விவகாரத்திற்குள்ளே போக விரும்பவில்லை என்றாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறிப்பாக மலைப்பகுதிகளிலே பாடுபடுகின்ற தொழிலாளர்களுக்கு பணமாகவும், பொருளாகவும் பிற வசதிகள் மூலமும் வசதிகளை செய்து கொடுப்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறையுடன் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டம் ஒன்று இருக்கிறபோது அந்த சட்டத்திற்கட்பட்ட ஒரு நிர்வாகம் தனியாகக் காரியங்களைச் செய்துவிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, போனஸ் சட்டம் இப்போது இருக்கிற முறையில் இருந்தாலும் தமிழ்நாடு அரசு நடத்துகின்ற போக்குவரத்துத் துறையில்கூட தொழிலாளர்களுக்கு எக்ஸ்கிரேஷியா என்ற அடிப்படையில் பல்லாண்டுகளாக போனஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போல அதிக லாபம் வருகின்ற மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கும் சிங்கோனா, இரப்பர் தோட்டங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் எக்ஸ்கிரேஷியா அடிப்படையில் போனஸ் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9·40]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்துத் துறைபற்றிச் சொன்னார்கள். அது கார்ப்பரேஷன் என்ற அடிப்படையில்

வேறு விதிகளின் கீழே இயங்கி வருகிறது. இன்னொரு விளக்கத்தையும் அளிக்க விரும்புகிறேன். லாபம் என்பதற்கும், அரசு நடத்துகின்ற இப்படிப்பட்ட துறைகளில் மூலம் கிடைக்கின்ற வருவாய் என்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. லாபம் என்பது தனியார் அவர்களுடைய சொந்தத்திற்கு எடுத்துக்கொள்வது. ஆனால் அரசு திரட்டுகின்றவைகளில் இந்த வருவாய் நாட்டு மக்களுக்கு பயன்படுகிற வகையில் செலவு செய்யப்படுகிற ஒன்று என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே லாபம் வந்தால் அது தொழிலாளர்களின் மற்ற குடும்பங்களுக்கு வேறு வகையிலே போய் அது செலவழிக்கப்படுகிறது என்பதை கடந்த மாதம் கூட தோட்டத் தொழிலாளர்களிடம் விளக்கி இருக்கிறேன், அவர்களுடைய உறவினர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு, கல்வி வசதி, மருத்துவ வசதி ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து வசதி போன்றவற்றைச் செய்து கொடுக்க இந்த லாபம் பயன்படுகிறது. ஆகவே அரசு ஈட்டுகின்ற இந்த வருவாய் லாபம் என்ற அந்த அடிப்படைக்குள்ளே, அந்த நியதிக்குள்ளே வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவரவர்களே, இந்த ஒரு துறையிலே மாத்திரம் இதை செய்வது என்பது சரியாகாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மீதியுள்ள பல இடங்களிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படுகிறபோது, அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறபோது இதற்கும் அனுமதித்தால் என்ன என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதாவது மாதவரம் பால்பண்ணையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு இது அளிக்கப்படுகிறதா, அதன் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோன்று அளிக்க இயலுமா என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. அது வேறு துறையிலே வரக்கூடிய ஒன்று. என்னுடைய பொறுப்பிலே உள்ள அரசுத் துறையைத்தான் நான பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே வேறு துறைகளில் அப்படி ஏதாவது நடந்து அதற்கு அனுமதி அளிக்கப்படுமேயானால், நிதித் துறையாலும் ஏற்றுக்கொள்ளப்படுமேயானால் தொழிலாளர்களுக்கான நலன்களைச் செய்வதில் இந்த அரசு பின் தங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஏதாவது இருந்தால், செய்ய முடிந்தால் அதை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.